IN THE COURT OF THE SUBORDINATE(SUB JUDGE), KANGAYAM

| OS.NO.5/2020 |
| --- |
| DW - 1 |

Deposition of Witness.

| Name/பெயர் | பாலசுப்பிரமனி | Father's Name/ தந்தை பெயர் | |
| --- | --- | --- | --- |
| Village/கிராமம் | | Taluk/வட்டம் | |
| Calling/தொழில் | | District/மாவட்டம் | |
| Date/தேதி | 17.07.2026 | Age/வயது | |

Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on 17.07.2026 at 12.30 a.m. to 12.40 p.m.

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது:**

1. ஒன்றாம் வாதி இளவர் கனிகா என்னுடைய மகள். எனக்கும், இரண்டாம் வாதி சாதனாவிற்க்கும் 2010 ல் திருமணம் நடந்தது. எனக்கும், என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட வகையில் நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் என் மனைவிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுக்கவில்லை, அவர் இரண்டாம் திருமணம் செய்ததைப் பற்றி காவல் நிலையத்தில் சொன்னேன் அவர்கள் எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள்.

2. காவல்துறையினர் புகாரை எடுக்கவில்லை என்பதன் தொடர்ச்சியாக மேல் நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை. நான் கொடுத்ததாக சொல்லும் புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் என் மனைவி, குழந்தைகளுடன் சேர்ந்து வாழ வேண்டும் என

இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் கூப்பிட்டுக்கொண்டே தான் இருக்கிறேன்.

3. திருமணமான அடுத்த ஆண்டு எங்களுக்கு குழந்தை பிறந்தது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால், எனக்கு பிரச்சனை இருந்ததால் 1 வருடம் மது அருந்தினேன். என்ன தொழில் செய்து எனக்கு கடன் ஆனது என்றால் நான் கீழே விழுந்து, கால் உடைந்து விட்டதால் மருத்துவ செலவினால் கடன் ஏற்பட்டு விட்டது. அத்தியாவசிய தேவைகளுக்காக நான் என் மனைவி, குழந்தையின் நகையை வாங்கி விட்டேன் என்றால் கிணறு வெட்டுவதற்காக என் மனைவியே 2 பவுன் நகையை கொடுத்தார்.

4. மேற்படி என் மனைவிக்கு அவர் வீட்டில் கொடுத்த 25 பவுன் நகையும் என்னுடைய மது ஆசைக்காக நான் விற்றுவிட்டேன் என்றால் அது தவறு. மருத்துவச்செலவுக்காக கடனாகி விட்டது என நான் சொல்வது வழக்கற்கான பொய்யான சங்கதி என்றால் அது தவறு. நான் எனக்கே தெரியாமல் மதுவுக்கு அடிமையாகி விட்டேன் என்றால் அது தவறு. நான் மதுவிற்காக என் மனைவியை அடித்து அவருடைய தகப்பனார் வீட்டில் பணம் வாங்கி வர சொன்னேன் என்றால் அது தவறு.

5. நான் மது அருந்துவதோடு மட்டுமல்லாமல் என்னுடைய நண்பர் குழாமை வீட்டிற்கு அழைத்து வந்து மனைவி, குழந்தைகள் முன்பு மது அருந்துவோம் என்றால் அது தவறு. நான் மது அருந்தி விட்டால் என் நிலைமை மாறி என் மனைவியை தாக்குவேன் என்றும் மற்ற நேரத்தில் அதுபோல் செய்ய மாட்டேன் என்று சொன்னால் அது தவறு. 2013 ஆம்

ஆண்டில் இருந்து நான் என் மனைவி, குழந்தையை பிரிந்து வாழ்கிறேன். என் மனைவி அவருடைய தகப்பனார் வீட்டில் வசித்து வருகிறார்.

6. இரண்டாம் வாதியின் சகோதரர் திருக்குமரன், சித்தப்பா சாமிநாதன் மற்றும் குமார் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் என்னிடம் சமரசம் பேச என் வீட்டுக்கு வந்திருந்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. 2016 ல் சமரசம் பேசப்பட்டு நாங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

Signature of the witness.

Taken down before me in open Court, read over to the witness and admitted to be correct.

K ANANTHAN
Digitally signed by K ANANTHAN
Date: 2026.07.20 08:27:30 +0530

**Subordinate Judge,**
**Subordinate Court,**
**Kangayam.**